நாள்: 27.06.2014

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>வண்டலூர் பூங்காவில் ஒரே வருடத்தில் 3 சிங்கவால் குரங்குக் குட்டிகள்</u>**

**சென்னை:**

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் கடந்த ஒரு ஆண்டுக்குள் 3 அரிய வகை சிங்கவால் குரங்குக் குட்டிகள் பிறந்துள்ளன.

இது குறித்து பூங்கா நிர்வாகம் வெளியிட்ட செய்தி:

உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் அரிய வகை விலங்குகளின் இனப்பெருக்கத்தைப் பெருக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் விளைவாக கடந்த ஒரு வருடத்துக்குள் 3 சிங்கவால் குட்டிகள் புதிதாகப் பிறந்துள்ளன. இதையடுத்து தற்போது பூங்காவில் உள்ள சிங்கவால் குரங்குகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

சிங்கத்தைப் போன்ற முக அமைப்பு மற்றும் வாலினைக் கொண்ட இந்த வகை குரங்குகள் சோலைக் காடுகளில் அதிகம் வசித்து வருகின்றன. அழிந்து வரும் அரிய வகை விலங்கினங்களில் ஒன்றான இந்த குரங்குகள் தற்போது தமிழகம், கேரளம் மற்றும் கர்நாடக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மட்டுமே உள்ளன. சிங்கவால் குரங்குகளின் எண்ணிக்கையை அதிகரிக்க, வண்டலூர் பூங்காவில் இயற்கையான சூழலில் அடைப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்த அடைப்பிடங்களில் ஆண் மற்றும் பெண் குரங்குகள் தனித்து விடப்படுகின்றன. இதன் விளைவாக வண்டலூர் பூங்காவில் இதுவரை 47 சிங்கவால் குரங்குக் குட்டிகள் பிறந்துள்ளன. வண்டலூரில் பிறந்த குட்டிகள் குவாஹாட்டி, சிம்லா, தில்லி, திருவனந்தபுரம், மைசூர், பரோடா உள்ளிட்ட

இடங்களில் அமைந்துள்ள உயிரியல் பூங்காக்களுக்கு பரிமாற்ற அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு உரப் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு பயிற்சி**

**உத்தமபாளையம்:**

தேனி மாவட்ட வேளாண்மைத் துறை சார்பாக, சின்னமனூரில் மாவட்ட அளவிலான விவசாயிகளுக்கு உரப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்பட்டது.

தேனி மாவட்டத்தில் பெரும்பான்மையோர் விவசாயம் சார்ந்த தொழில்களையே அதிகளவில் செய்து வருகின்றனர். தற்போது, பல வகையான உரங்களை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். இதனால், தேனி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி விளை நிலங்களில் என்ன உரங்களை, ஏன் பயன்படுத்த வேண்டும், எப்படி மற்றும் எவ்வளவு பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு பயிற்சி, தேனி மாவட்ட வேளாண் துறை சார்பாக வியாழக்கிழமை அளிக்கப்பட்டது.

மண் பரிசோதனை முக்கியத்துவத்தைப் பற்றி வேளாண் அதிகாரி பேசுகையில், விவசாயிகள் தங்கள் நிலத்தில் மண்ணை முதலில் பரிசோதனை செய்ய வேண்டும். இந்த பரிசோதனையில், மண்ணில் எவ்வளவு, என்னென்ன ஊட்டச் சத்துகள் உள்ளன என்பது தெரியவரும். பயிர் அறுவடைக்குப் பின்னர் மண்ணில் இருந்த ஊட்டச் சத்துக்கள் அளவு குறைந்துவிடும். அதனைத் தொடர்ந்து, பயிரின் தேவை, மண்ணின் தன்மை, உர உபயோகத் திறன் முதலியவற்றை கருத்தில்கொண்டு, உரத்தின் அளவை நிர்ணயம் செய்ய முடியும் என்றார்.

மண் பரிசோதனைக்குப் பிறகு, மண்ணின் தன்மைக்கேற்ப பாஸ்பரஸ், பொட்டாசியம், நைட்ரஜன் மற்றும் தனிம ஊட்டச் சத்துக்களையும், கால்சியம், மக்னீசியம், கந்தகம் ஆகியவற்றைப் பொறுத்து தேவைப்படும் சத்தை, எவ்வகை உரத்தின் மூலம் பெறுவது என்பதைத் தீர்மானித்து, அவ்வகை உரத்தை நிலத்துக்கு இடவேண்டும். இதன்மூலம் பயன்படுத்தபடும் உரத்தின் அளவு குறைந்து, அதிமாக உரம் பயன்படுத்துவது தவிர்க்க முடியும் என, விவசாயிகளுக்கு தெரிவித்தனர்.

எனவே, இனிவரும் காலங்களில் விவசாயிகள் தங்கள் விவசாயம் சம்பந்தமான சந்தேகங்களை, அருகில் இருக்கும் வேளாண்மைத் துறை அதிகாரிகளை தொடர்பு கொண்டு நல்ல தரமான உரங்களை வாங்கி, அதிகளவில் மகசூல் செய்து, நல்ல லாபம் அடைய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர், விவசாயிகளுக்கு மழைநீர் சேகரிப்பு பற்றிய கிராமிய கலை நிகழ்ச்சிகள் மூலம் விளக்கப்பட்டது.

தேனி மாவட்ட வேளாண்மைத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விழிப்புணர்வு பயிற்சிக்கு, தேனி மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயப்பாண்டி வரவேற்புரையாற்றினார். தேனி மாவட்ட வேளாண்மை இயக்குநர் சுந்தரம் தலைமை வகித்தார். டான்ஃபெட் மாநிலத் தலைவர் முருகன், வேளாண்மை துணை இயக்குநர் திலகர், சந்திரசேகர், முகமது ஜபருல்லா, அழகு நாகேந்திரன், இஃப்கோ மண்டல மேலாளர் மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டனர். சின்னமனூர் வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகரன் நன்றி கூறினார்.

## <u>பவானிசாகர் அணை நீர்மட்டம் 48.35 அடி</u>

**ஈரோடு**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 48.35 அடியாக இருந்தது.அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,066 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 750 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.05 டி.எம்.சி.

## <u>கெட்டுஅள்ளியில் கிராம அளவிலான தொழில்நுட்பப் பயிற்சி முகாம்</u>

**தருமபுரி,:**

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டாரம் கெட்டுஅள்ளியில் கிராம அளவிலான இரண்டு நாள் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் நடைபெற்றது.

தருமபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் சார்பில் நடைபெற்ற இந்தப் பயிற்சி

முகாமில் தலைமை வகித்து வேளாண்மை இணை இயக்குநர் கே.மோகன் பேசியது:

மாவட்டத்தில் மானாவரி பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுவதால் கோடை உழவு செய்தல், சரிவுக்கு குறுக்கே ஆழமாக உழுதல், ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்தல் முறையில் பயிர் சாகுபடி மேற்கொள்ளுதல், பண்ணைக் குட்டைகள் மூலம் மழைநீரைச் சேமித்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும்.

தமிழக அரசின் "இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம்' என்ற நோக்கத்தை நிறைவு செய்யும் விதமாக விவசாயிகள் அனைத்து தொழில்நுட்பங்களையும் கடைப்பிடிக்க வேண்டும் என்றார் அவர்.

தரமான விதை தேர்வு, உயிர் உரங்களின் முக்கியத்துவம், உயிர் உர விதை நேர்த்தி, மானாவாரி பயிர்களுக்கு ஊட்டமேற்றிய தொழு உரம் இடுவதன் அவசியம் குறித்து உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் புவனேஸ்வரி செய்முறை விளக்கம் செய்து காண்பித்தார்.

லாபகரமான கறவை மாடு வளர்ப்பு, பால் உற்பத்தியை அதிகரிக்கும் வழிமுறைகள், கால்நடைகள் சார்ந்த தொழில்கள் தொடர்பான வாய்ப்புகள் குறித்து குண்டல்பட்டி கால்நடை அறிவியல் நிலைய பேராசிரியர்கள் மீனலோசனி, சந்தோஷ்குமார் ஆகியோர் விளக்கினர். பயிற்சி முகாமில் முன்னோடி விவசாயிகள் 25 பேர் கலந்து கொண்டனர்.

உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பெ.பாஸ்கர், வேளாண்மை அலுவலர்கள் பழனிவேல், சிவசங்கரி, துணை வேளாண்மை அலுவலர் சேகரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ரங்கநாதன், ரவிசங்கர் உள்ளிட்டோர் முகாமில் கலந்து கொண்டனர்.

அட்மா திட்ட பணியாளர்கள் அருண்குமார், கார்த்திகேயன், ராஜதுரை, உழவர் விவாதக் குழு அமைப்பாளர்கள் செந்தில்குமார் ஆகியோர் பயிற்சி முகாமிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

## நாமக்கல்லில் பருத்தி மூட்டைகள் ரூ. 5.30 லட்சத்துக்கு ஏலம்

**நாமக்கல்:**

நாமக்கல் கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் நடைபெற்ற ஏலத்தில் 300 பருத்தி மூட்டைகள் ரூ.5.30 லட்சத்துக்கு வியாழக்கிழமை ஏலம் போயின.

நாமக்கல்லில் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வாரம் தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. இங்கு வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு மொத்தம் 300 பருத்தி மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4,850 முதல் ரூ.5,350 வரையும், டிசிஹெச் ரகம் குவிண்டால் ரூ.5,300 முதல் ரூ.5,555 வரையும், சுரபி குவிண்டால் ரூ.5,350 முதல் ரூ.5,740 வரையும் என மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.5.30 லட்சத்துக்கு ஏலம் போனதாக கூட்டுறவு விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

## ஏற்காட்டில் பலாப் பழம் சீசன் தொடக்கம்

**ஏற்காடு:**

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் பலாப் பழம் சீசன் தொடங்கியுள்ளது.ஏற்காட்டில் தற்போது மரங்களில் பலாப் பழம் அதிக அளவு காய்கத் தொடங்கியுள்ளது. இங்கு பொருக்கான் வகையான பலாப் பழங்கள் அதிக அளவில் விளைகின்றன. இவற்றை ஏற்காட்டுக்கு சுற்றுலா வரும் பயணிகள் அதிக அளவில் வாங்கிச் செல்லுகின்றனர். ஏற்காட்டைச் சுற்றிலும் உள்ள 67 மலைக் கிராமங்களில் செம்மநத்தம், நாகலூர் முளுவி, குண்டூர், ஏற்காடு கீரைக்காடு, செங்காடு, காக்கம்பாடி, கொட்டச்சேடு, பட்டிப்பாடி, நடூர், வேலூர் ஆகியப் பகுதிகளில் காபித் தோட்டங்களில் ஊடு பயிராகவும், காபிச் செடிகளுக்கு நிழல் தரும் மரமாகவும் பலா மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

இதுகுறித்து பலாப்பழ வியாபாரி மனோன்மணி கூறியது:

ஏற்காடு செம்மநத்தம் கிராமத்தில் இருந்து அதிக அளவு பலாப் பழங்கள் விற்பனைக்கு வருகிறது. மே மாதம் முதல் ஜுலை மாதம் வரை பலாப் பழ அதிக

அளவில் விற்பனைக்கு வரும். பழங்கள் ரூ.50 முதல் ரூ.100 வரையிலான விலையில் விற்கப்படுகின்றன என்றார் அவர்.

**<u>வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு கிராமிய தொழில்நுட்பப் பயிற்சி</u>**

**அரியலூர்:**பெரம்பலூர் ரோவர் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களுக்கு அரியலூர் வட்டாரத்தில் 10 நாட்கள் கிராமிய தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பெரம்பலூர் ரோவர் வேளாண்மைக் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் 12 பேர் நவீன விவசாயம் குறித்து அறிந்து கொள்வதற்காக அரியலூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் மூலம் கடந்த 17-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை 10 நாட்கள் கிராமிய தொழில்நுட்பப் பயிற்சி பெற்றனர். இதன் ஒரு பகுதியாக அரியலூர் அருகே உள்ள பெரியநாகலூர் கிராமத்தில் உள்ள முன்னோடி விவசாயி பாண்டித்துரையின் கரும்பு வயலுக்குச் சென்று செம்மை கரும்பு சாகுபடி, பசுமை குடிலில் செம்மை கரும்பு நாற்றங்கால் வளர்க்கும் தொழில்நுட்பம் குறித்தும், முருங்கை சாகுபடி மற்றும் சொட்டுநீர்ப் பாசனத் தொழில் நுட்பம் ஆகியவை குறித்து கேட்டறிந்தனர்.

மேலும் நாகமங்கலம் பகுதியில் உள்ள முன்னோடி விவசாயி செல்லப்பிள்ளையின் வயலுக்குச் சென்று நிலக்கடலை சாகுபடியில் உள்ள தொழில்நுட்பம் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம் குறித்து நேரடி விளக்கம் பெற்றனர்.

இதில் வேளாண் உதவி இயக்குநர் சு. மல்லிகா, வேளாண் அலுவலர் டி. ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**<u>பொன்னமராவதியில் மானிய விலையில் வேளாண் இடுபொருள்கள்</u>**

**பொன்னமராவதி:**

பொன்னமராவதி வட்டாரத்தில் நடப்பு காரீப் பருவ சாகுபடிக்கு தேவையான வேளாண் இடுபொருள்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படுவதாக வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தற்போது பெய்துள்ள கோடைமழையை பயன்படுத்தி கோடை உழவு செய்து மண்ணின் நீர்பிடிப்பு தன்மையை அதிகப்படுத்தலாம். களைகளின் வேர்களையும், விதைகளையும் அழிப்பதன் மூலம் பயிரிடும்போது களைகளால் ஏற்படும் மகசூல் இழப்பை தடுக்கலாம்.

நடப்பு காரீப் பருவத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்காக உயர்ந்த ரக நிலக்கடலை விதைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இதேபோல குறுவை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்காக ஆடுதுறை 45 ரக சான்று பெற்ற நெல் விதைகள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. வேளாண் கருவிகளை பொருத்தவரை நிலத்தை உழுது சமன்படுத்தும் ரொட்டவேட்டர் கருவி மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், பயறு விளைச்சலை அதிகப்படுத்தும் சான்று பெற்ற உளுந்து, தட்டைப்பயிறு, பச்சைப்பயிறு விதைகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

நடப்பு பருவத்தில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விளைச்சலை அதிகரிக்க இடை உழவு செய்து உயிர் உரங்கள், ரசாயண உரங்கள், மற்றும் நுண்சத்து உரங்கள் இடவேண்டியது அவசியமாகும். மேலும், தக்கைப்பூண்டு, சணப்பு போன்ற விதைகளை அடர்த்தியாக விதைத்து மடக்கி உழுவதன் மூலம் தென்னை மகசூலை அதிகரிக்கலாம்.

தக்கைபூண்டு விதைகள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. மேலும், அறுவடை செய்யும் வேளாண் பொருள்களை நல்லமுறையில் காயவைத்து சுத்தம் செய்ய தேவையான தார்ப்பாய்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

எனவே, பொன்னமராவதி வட்டார விவசாயிகள் தங்களுக்குத் தேவையான அனைத்து வேளாண் இடுபொருள்களையும் பெற்று பயனடையலாம்.

## பாசன, வடிகால் வாய்க்கால் தூர்வாரும் பணிகள் நிறைவு

**மயிலாடுதுறை:**

மயிலாடுதுறை பகுதிகளில் உள்ள பூவேந்திரன் வாய்க்கால், நாட்டுக்கன்னி வடிகால் வாய்க்கால்களின் தூர்வாரும் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாக

மயிலாடுதுறை பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

காவிரியிலிருந்து பிரிந்து, ஆளவேலி அருகே பழையாறில் சேரும் பூவேந்திரன் வாய்க்கால் மூலம் மணக்குடி, கஞ்சாநகரம், பொன்னுக்குடி, திருநன்றியூர், இளையான்குடி, ஆளவேலி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பாசன வசதியைப் பெறுகின்றனர்.

11 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த முதல் நிலை வாய்க்காலின் தூர்வாரும் பணிகள் பொதுபணித்துறை மயிலாடுதுறை கோட்டச் செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், உதவி கோட்டச் செயற்பொறியாளர் இளங்கோ ஆகியோரது மேற்பார்வையின் கீழ் ரூ. 14 லட்சம் திட்ட மதிப்பீட்டில் நடைபெற்றது. அதேபோல், மயிலாடுதுறை வட்டம்,திருமங்கலம், விக்கிரமனாற்றில் பிரிந்து, கீழமேடு அருகே ஐயவையனாற்றில் சேரும் 3.5 கிலோ மீட்டர் நீளமுள்ள நாட்டுக்கன்னி வடிகால் வாய்க்காலின் தூர்வாரும் பணிகள் ரூ. 4 லட்சம் திட்ட மதிப்பீட்டில் நடைபெற்றது.

இந்த 2 வாய்க்கால்களின் தூர்வாரும் பணிகள் ஜூன் 24-ம் தேதியுடன் நிறைவு பெற்றுள்ளதாக உதவிப் பொறியாளர் ஜெயபாஸ்கரன் தெரிவித்தார்.

## சிறிய வெங்காயத்தில் பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த ஆலோசனை

**பெரம்பலூர்:**

பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள சிறிய வெங்காயத்தில் காணப்படும் பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளார் வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலெட்சுமி.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் வைகாசிப் பட்டத்தில் நடவு செய்த சிறிய வெங்காயப் பயிரானது, தற்போது 20 முதல் 30 நாள்கள் வயதுடைய பயிராக உள்ளது. பெரும்பாலான இடங்களில் காய் அழுகல் நோயின் தாக்குதலும், ஹெலிகோவெர்பா எனப்படும் பச்சைப்புழு தாக்குதலும் காணப்படுகிறது. அழுகல் நோயினால் பாதிக்கப்பட்ட செடிகளின் தாள்கள் வெண்மை நிறமாக நீண்டு வளைந்து காணப்படும்.

பாதிப்பு முற்றிய நிலையில் தாள்கள் காய்ந்து போனது போல் தோற்றமளிக்கும்.

பாதிப்பிற்குள்ளான செடிகளை பிடுங்கிப் பார்த்தால் வேர் மற்றும் குமிழங்கள் அழுகி காணப்படும். இதை முகர்ந்தால் ஒரு வகையான துர்நாற்றம் வீசும். பூஞ்சை மற்றும் பாக்டீரியா நுண் கிருமிகளால் ஏற்படும் இந்நோய் நீர்ப்பாய்ச்சும் போது அதிகமாகப் பரவும். இந்நோயைக் கட்டுப்படுத்த, பாதிப்பிற்குள்ளான செடிகளைப் பிடுங்கி வயலிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். பின்னர் கார்பெண்டாசிம், மாங்கோசெப் கலந்த பூஞ்சாணக் கொல்லி கலவையை 10 லிட்டர் நீருக்கு 20 கிராம் அளவிலும், ஸ்டிரெப்டோசைக்ளின் பாக்டீரியா கொல்லி மருந்தை 10 லிட்டர் நீருக்கு 2 கிராம் அளவிலும் கலந்து செடிகளைப் பிடுங்கிய இடத்தில் சுமார் 100 மில்லி அளவில் ஊற்றி, அதே கரைசலை இலைகளின் மீது தெளித்தும் நோய் பரவாமல் கட்டுப்படுத்தலாம்.

ஹெலிகோவெர்பா எனப்படும் பச்சைப்புழு தாள்களைத் துளைத்து உள்ளே சென்று, மேலிருந்து தாள்களின் பச்சையத்தை சாப்பிடும்.

இதனால் தாள்களின் நுனிபாகம் திடத்தன்மை இழந்து சுருக்கம் விழுந்து துவண்டு போய் காணப்படும். இதை உடனடியாகக் கண்டறிந்து கட்டுப்படுத்தாவிட்டால் வயல் முழுவதும் பரவி அதிக சேதாரத்தை உண்டுபண்ணும்.

இந்த ஹெலிகோவெர்பா புழுவைக் கட்டுப்படுத்த புளூபெண்டையமைடு எனும் பூச்சிக் கொல்லியை 10 லிட்டர் நீருக்கு 3 மில்லி அளவில் கலந்து, மாலை வேளையில் தாள்கள் நன்கு நனையும்படி தெளிக்கலாம். பயிருக்கு பூச்சிக் கொல்லி, பூஞ்சாணக்கொல்லி தெளிக்கும் போது ஒட்டும் திரவம் சேர்த்து தெளிப்பதன் மூலம், தெளிக்கக்கூடிய திரவமானது அதிக அளவில் தாள்களில் ஒட்டி சிறந்த முறையில் கட்டுப்பாடு கிடைக்கும்.

அழுகல் நோய் மற்றும் பச்சைப்புழு இரண்டின் தாக்குதலும் ஒரே வயலில் தென்பட்டால், மேற்கூறிய பூஞ்சாணக் கொல்லி, பாக்டீரியா கொல்லி மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து தெளிக்கலாம்.

**பாளை. சிறைத் தோட்டத்தில் கைதிகள் சாகுபடி செய்த புதிய ரக நிலக்கடலை அறுவடை**

**திருநெல்வேலி:**

பாளையங்கோட்டையில் உள்ள மத்திய சிறைத் தோட்டத்தில் கைதிகள் விளைவித்த புதிய ரக (பஎ37அ) நிலக்கடலை அறுவடைப் பணி வியாழக்கிழமை நடைபெற்றது. இதில், பாபா அணு ஆராய்ச்சி மைய விஞ்ஞானி பங்கேற்று கைதிகளை உற்சாகப்படுத்தினார்.

சிறைகளில் விவசாய தொழில்நுட்பத்தை சிறைவாசிகளுக்குப் பயிற்றுவிக்கும் நோக்கத்தில் அமைக்கப்பட்ட திறந்தவெளி சிறைத் திட்டத்தின் தொடர்ச்சியாக, விவசாயப் பின்னணி கொண்ட சிறைவாசிகளை சிறைகளில் உள்ள தோட்டங்களில் பணியில் ஈடுபடுத்திடவும், தண்டனைக் குறைப்பு மற்றும் வருமானம் ஈட்டும் வகையாகவும் சிறைத் துறையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழக கூடுதல் காவல் துறை இயக்குநர் மற்றும் சிறைத் துறை தலைவர் திரிபாதி, மும்பை பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் சேகர் பசு ஆகியோர் ஆலோசனையின்பேரில் பஎ37அ என்னும் வீரியரக நிலக்கடலை விதை பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு வழங்கப்பட்டு, மொத்தம் 20 ஏக்கர் பரப்பளவு கொண்ட சிறைத் தோட்டத்தில், 5 ஏக்கரில் பயிரிடப்பட்டது. அதன் அறுவடைப் பணி வியாழக்கிழமை நடைபெற்றது.

இப் பணியைப் பார்வையிட்ட பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் தொழில்நுட்பப் பிரிவு மூத்த விஞ்ஞானி டேனியல் செல்லப்பா கூறியதாவது:

பாபா அணு ஆராய்சசி நிலையத்தின் கீழ் இதுவரை 42 வகையான வீரிய வகை விதைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பஎ37அ வகை நிலக்கடலை உள்ளிட்ட 18 வகையான விதைகள் எண்ணெய்வித்துக்களாகும்.

பஎ37அ ரக நிலக்கடலை விதை 2004ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. வட மாநிலங்களில் வேளாண் துறை, பல்கலைக்கழகங்கள் மூலம் இந்த ரகம் தோட்டங்களில் பயிரிடப்பட்டு வருகிறது. தமிழகத்தில் சிவகங்கை மாவட்டத்தைத்

தொடர்ந்து திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலைத் தோட்டத்துக்கு வழங்கப்பட்டது.

140 கிலோ விதைகள் 5 ஏக்கரில் 4 கட்டங்களாக விதைக்கப்பட்டன. 15-3-2014 அன்று விதைக்கப்பட்ட நிலக்கடலை 102 நாள்கள் கழித்து 26-6-2014இல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலக்கடலை ரகம் வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை கொண்டது. தோட்டங்களில் பயிரிடும்போது 100 நாள்களிலும், மானாவாரி நிலங்களில் பயிரிடும்போது 110 நாள்களிலும் அறுவடைக்குத் தயாராகிவிடும். 72 முதல் 75 சதவீத கொட்டை தரக்கூடிய நிலக்கடலையாகும். 48 சதவீதம் எண்ணெய் திறனும், 23 சதவீதம் புரதச் சத்தும் இந்த நிலக்கடலைகளில் இருக்கும்.

மிகப்பெரிய அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் திட்டத்தின் மூலம் இந்தப் புதிய நிலக்கடலை விதைகளை விவசாயிகளுக்கு கொண்டுசெல்ல முன்வந்தால், விதைகளைத் தயார் செய்து வழங்கலாம் என்றார் அவர்.

இதுகுறித்து வேளாண்மைத் துறையின் உதவி இயக்குநர் சி.மகாலிங்கம், வேளாண்மை அலுவலர் மாரியப்பன் ஆகியோர் கூறுகையில், மும்பை பாபா அணு ஆராய்ச்சி மையத்திலிருந்து இயற்கை சடுதி மாற்றம் என்னும் முறையின் கீழ் தயாரிக்கப்பட்ட இந்த நிலக்கடலை விதையில் உருவான பயிர் நல்ல சாகுபடி கொடுத்துள்ளது. விதைநேர்த்தி, ஜிப்சம், உரம் இடுதல், பயிர்ப் பாதுகாப்பு போன்ற தொழில்நுட்பங்கள் வேளாண் துறையின் மூலம் சிறைக் கைதிகளுக்கு அளிக்கப்பட்டது. இம் மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் நிலக்கடலை ரகங்களில் சராசரியாக ஹெக்டேருக்கு 2 முதல் 2.5 டன் வரக்கூடிய வகையில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், இந்தப் புதிய விதை ரகத்தால் ஹெக்டேருக்கு 5 மெட்ரிக் டன் மகசூலும், அதன்மூலம் ஒரு ஹெக்டேருக்கு சுமார் 2 லட்சம் வரை வருவாய் கிடைக்கும் வாய்ப்புள்ளது என்றனர்.

பாளையங்கோட்டை மத்திய சிறைக் கண்காணிப்பாளர் கனகராஜ் பேசுகையில், இந்தச் சிறைச்சாலைக் கைதிகளுக்கு இதுபோன்ற வேளாண் பயிற்சி மறுவாழ்வு அளிப்பதாகத் திகழும். கைதிகளும் மிகுந்த ஆர்வத்தோடு சாகுபடி பணியில் ஈடுபட்டு இப்போது மனம் நிறைந்த மகசூலை பெற்றுள்ளனர் என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில் மும்பை பாபா அணு ஆராய்ச்சி நிலைய ஊழியர் லோகு உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**<u>பாசன வாய்க்கால் தூர்வாரும் பணி</u>**

**சிதம்பரம்:**

சிதம்பரம் அருகேயுள்ள வடக்குராஜன் வாய்க்காலின் கிளை வாய்க்கால் தூர்வாரும் பணி தொடங்கியது.காவிரி டெல்டா பாசன வாய்க்கால்களை தூர்வார தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளதை அடுத்து, சிதம்பரம் அருகேயுள்ள குமராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட வடக்குராஜன் வாய்க்காலின் கிளை வாய்க்காலான கருப்பூர் வாய்க்கால் 7 கி.மீ. தொலைவு ரூ.4.50 லட்சம் செலவில் தூர்வாரும் பணி வியாழக்கிழமை தொடங்கப்பட்டது.

தூர்வாரும் பணியை கொள்ளிடம் வடிநில கோட்ட பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் ஆர்.செல்வக்குமார் மேற்பார்வையில் குமராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் கே.ஏ.பாண்டியன் தொடங்கி வைத்தார்.இந்நிகழ்ச்சியில் உதவிப் பொறியாளர் டி.சிவசங்கரம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் டி.கோவிந்தராஜன், காந்தி, இளஞ்செழியன், வர்த்தக சங்கத் தலைவர் கே.ஆர்.தமிழ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.கருப்பூர் பாசன வாய்க்கால் தூர்வாருவது மூலம் கீழபருத்திக்குடி, மேலபருத்திக்குடி, முள்ளங்குடி, அத்திப்பட்டு, கீழக்கரை, கருப்பூர் உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள 2150 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனம் பெற்று பயன்பெறும் என செயற்பொறியாளர் ஆர்.செல்வக்குமார் தெரிவித்தார்.

**<u>சர்க்கரை ஆலைகளுக்கு வட்டியில்லா கடன்: தமிழக விவசாயிகள் பயன் பெறுவது எப்படி?</u>**




விவசாயிகளின் போராட்டத்தின் எதிரொலியாக, சர்க்கரை ஆலைகளுக்கு வட்டியில்லா கடன் வழங்க, 4,400 கோடி ரூபாயை, மத்திய அரசு ஒதுக்கி உள்ளது. இந்த நிதி, விவசாயிகளை சென்று சேருவதை கண்காணிக்க, குழு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இறக்குமதி:

நாடு முழுவதும், 550 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இங்கு உற்பத்தியாகும் சர்க்கரை பயன்பாட்டை தவிர்த்து, வெளிநாடுகளில் இருந்து சிலர், வர்த்தக ரீதியாக இறக்குமதி செய்கின்றனர். இதனால், ஆலைகளில் சர்க்கரை தேக்கமடைந்து, விலை போகாமல் வீணாகிறது. இதனால், கொள்முதல் செய்த கரும்புக்கான விலையை விவசாயிகளுக்கு வழங்காமல், சர்க்கரை ஆலைகள் இழுத்தடிக்கின்றன. நாடு முழுவதும், பல ஆயிரம் கோடி ரூபாயை, சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் நிலுவை வைத்துள்ளன. தமிழகத்தில் மட்டும், 900 கோடி ரூபாய் அளவிற்கு நிலு வைத் தொகை உள்ளது. இந்த தொகையை, சர்க்கரை ஆலை நிர்வாகங்களிடம் கேட்டு, விவசாயிகள் சோர்ந்து போய்விட்டனர். இதனால், தங்களது எதிர்ப்பை தெரிவிக்க, நாடு முழுவதும் விவசாயிகள் போராட்டத்தில் குதித்துள்ளனர். டில்லி, தமிழகம், உ.பி., உள்ளிட்ட மாநிலங்களில், விவசாயிகளின் போராட்டம் நடந்து வருகிறது. இதை கருத்தில் கொண்டு, சர்க்கரை ஆலைகளுக்கு வட்டியில்லாத கடன் வழங்க, மத்திய அரசு முன்வந்தது. உயர்நிலை குழுவை கூட்டி விவாதித்த, மத்திய உணவுத்துறை அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான், நேற்று, இதுகுறித்த அறிவிப்பை வெளியிட்டார். அதன்படி, சர்க்கரை ஆலைகளுக்கு, 4,400 கோடி ரூபாய், வட்டியில்லா கடனாக வழங்கப்பட உள்ளது. மேலும் ஆலைகளின் நலனை கருத்தில் கொண்டு, சர்க்கரை இறக்குமதிக்கான வரி, 15 சதவீதத்தில் இருந்து, 40

சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம், வெளிநாடுகளில் இருந்து சர்க்கரை இறக்குமதி செய்வது, முற்றிலும் குறையும். அதே நேரத்தில், மத்திய அரசு வழங்கிய வட்டியில்லாத கடனை, கரும்பு கொள்முதல் நிலுவை தொகைக்கு வழங்க, சர்க்கரை ஆலைகள் முன்வர வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். போராடி பெறப்பட்ட இந்த நிதி, முறையாக விவசாயிகளை சென்று சேர்கிறதா என்பதை, மத்திய, மாநில அரசுகள் கண்காணிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

இதுகுறித்து, இந்திய விவசாயிகள் கூட்டமைப்பின் பொதுச் செயலர் விருத்தகிரி கூறியதாவது:

வட்டியில்லா கடன்:

மன்மோகன் சிங் தலைமையிலான முந்தைய மத்திய அரசு, சர்க்கரை ஆலைகளுக்கு, 6,600 கோடி ரூபாய் வட்டியில்லா கடன் வழங்கியது. இந்த கடனை, ஐந்து ஆண்டுகளில், வட்டி இல்லாமல் செலுத்தவேண்டும். இதில், இரண்டு ஆண்டுகள் கடன் விடுமுறை காலம். அடுத்த, மூன்று ஆண்டுகளில், மூன்று தவணையாக கடனை செலுத்த வேண்டும். வட்டியில்லா கடன் வழங்கியது மட்டுமின்றி, 45 லட்சம் டன் பழுப்பு சர்க்கரையை, ஆலைகளிடம் இருந்து மத்திய அரசு விலைக்கு வாங்கி, கையிருப்பாக வைத்துக் கொண்டது. சர்க்கரை இறக்குமதி வரியும், 5 சதவீதத்தில் இருந்து, 15 சதவீதமாக உயர்த்தப்பட்டது. விவசாயிகளுக்கு கரும்பு கொள்முதல் நிலுவைத் தொகையை வழங்க, இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அதன் பிறகும், பல ஆயிரம் கோடி ரூபாயை, ஆலைகள் நிலுவை வைத்துள்ளன. இந்த சூழ்நிலையில், நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, 4,400 கோடி ரூபாய் வட்டியில்லா கடன் வழங்க முன் வந்துள்ளது. இறக்குமதி வரியை, 40 சதவீதமாக நிர்ணயம் செய்துள்ளது.

விவசாய குழுக்கள்:

ஆனால், வட்டியில்லா கடன் பெறும் சர்க்கரை ஆலை நிர்வாகங்கள், கடந்த காலங்களை போலவே, அவற்றை விவசாயிகளுக்கு வழங்காமல் இழுத்தடிக்கக் கூடும். எனவே, இந்த நிதி, விவசாயிகளுக்கு முறையாக செலவிடப்படுகிறதா என்பதை கண்காணிக்க, மத்திய, மாநில நிதி அமைச்சர்கள், வேளாண் அமைச்சர்கள், அதிகாரிகள், விவசாய குழுக்கள், சர்க்கரை ஆலை நிர்வாகங்கள்

அடங்கிய கண்காணிப்பு குழுக்களை அமைக்க வேண்டும். மத்திய, மாநில அரசுகள் இந்த நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

**மலேசிய 'வாட்டர் ஆப்பிள்' சேலத்தில் சாகுபடி**



**சேலம்:**மலேசியாவில் மட்டுமே விளையும், 'வாட்டர் ஆப்பிள்' மரங்களை, சேலத்தில் வளர்த்து மகசூல் எடுத்து, விவசாயி சாதனை படைத்துள்ளார்.மலேசிய நாட்டில், ஜம்பு நாடி நீர்வீழ்ச்சி பகுதியில், 'வாட்டர் ஆப்பிள்' என்ற ஜம்பி பழமரங்கள் சாகுபடியாகின்றன. இந்த பழத்தில், 93 சதவீத நீர்ச்சத்து, புரோட்டீன், கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், வைட்டமின்கள் உள்ளிட்ட நுண்ணூட்ட சத்துக்கள் உள்ளன.மலேசிய தட்பவெப்ப நிலையில் வளரும் இந்த பழ மரங்களை, சேலம் கரும்பாலையை சேர்ந்த கந்தசாமி என்பவர், ஒட்டு கன்றாக கொண்டுவந்து பயிரிட்டுள்ளார்.

இது குறித்து, கந்தசாமி கூறியதாவது:மலேசியாவில், வாட்டர் ஆப்பிள் என்னை கவர்ந்தது. இரண்டு ஒட்டு செடிகளை, எடுத்து வந்தேன். அவற்றை, மலேசிய வளர்ப்பு முறையில் வளர்க்கிறேன்; மகசூலும் எடுக்கிறேன்.வாட்டர் ஆப்பிள், நம்மூர் பேரிக்காய் சுவையை கொண்டுள்ளது. அதிக அளவில் நீர்ச்சத்து இருப்பதால், கோடையில் விரும்பி சாப்பிடுகின்றனர். இந்த பழத்தில், இனிப்பு குறைவாக உள்ளது. இதனால், சர்க்கரை நோயாளிகள் விரும்புகின்றனர்

குறைந்த அளவிலேயே விளைவதால், சேலத்தில் குறிப்பிட்ட கடைகளில் மட்டும், வாரத்துக்கு, 20 கிலோ முதல், 30 கிலோ வரை, விற்பனைக்கு அனுப்புகிறோம். மூன்று மாதத்துக்கு ஒரு முறை, மரத்தில் பழம் கிடைப்பதால், வருவாய்க்கு குறைவில்லை.

இவ்வாறு, அவர் கூறினார்.

## கபினி நீர்பிடிப்பு பகுதியில் கன மழை:மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரிப்பு

**மேட்டூர்:**கர்நாடகா கேரளா எல்லையில் உள்ள, கபினி நீர்பிடிப்பு பகுதியில், தீவிரம் அடைந்த தென்மேற்கு பருவமழையால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 4,100 கன அடியாக அதிகரித்தது.கர்நாடகா கேரளா எல்லையில், வயநாடு நீர்பிடிப்பு பகுதியில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து நீர்வரத்து அதிகரித்ததால், 65 அடி கொண்ட கபினி அணை நீர்மட்டம், நான்கு நாளில், 53 அடியாக உயர்ந்தது.அணை நிரம்ப இன்னமும், 12 அடியே உள்ள நிலையில், பாதுகாப்பு கருதி, அணைக்கு வந்த, 4,000 கன அடி நீர் ஆற்றில் திறக்கப்பட்டது. ஆனால், காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடையாததால், கே.ஆர்.எஸ்., அணைக்கு, 6,000 கன அடி நீர் மட்டுமே வந்தது.

அணை நிரம்பாத நிலையில், பாசனத்துக்காக வினாடிக்கு, 2,500 கன அடி நீர் காவிரியில் திறக்கப்பட்டது.கபினி அணை நீர் மற்றும் கே.ஆர்.எஸ்., அணையில் திறக்கப்பட்ட நீரின் ஒரு பகுதி, நேற்று காலை, மேட்டூர் அணைக்கு வந்தது.இதனால், நேற்று முன்தினம் வினாடிக்கு, 980 கன அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 4,100 கன அடியாக அதிகரித்தது.
நேற்று அணை நீர்மட்டம், 43 அடியாகவும், நீர் இருப்பு, 14 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 2,000 கன அடி நீர் குடிநீருக்காக வெளியேற்றப்படுகிறது.
டெல்டா குறுவை சாகுபடிக்கு நீர் திறக்க குறைந்தபட்சம், 52 டி.எம்.சி., நீர் மேட்டூர் அணையில் இருக்க வேண்டும். நீர் திறப்பை விட, நீர்வரத்து அதிகரித்துள்ளதால், வரும் நாட்களில் நீர்மட்டம் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.தென்மேற்கு பருவமழையால், நடப்பாண்டு முதன்முறையாக நேற்று மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரித்துள்ளது, தமிழக டெல்டா மாவட்ட விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## அரிசி, வெங்காயம் தட்டுப்பாடு வராமல் கிடைக்குமா? சமாளிக்க பிரதமர் மோடி அவசர ஆலோசனை

**புதுடில்லி:** தென்மேற்கு பருவமழை பற்றாக்குறையாகப் பெய்துள்ளதால், அரிசி, வெங்காயம் உட்பட, அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு வராமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து, தன் அமைச்சரவை சகாக்களுடன்,

பிரதமர் நரேந்திர மோடி, நேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது, 'கள்ளச்சந்தை பேர்வழிகள் மற்றும் பதுக்கல்காரர்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க, மாநில அரசுகள் விரைவு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும்' என, கேட்டுக் கொண்டார்.

அமைச்சரவை சகாக்களுடன், பிரதமர் நரேந்திர மோடி நேற்று நடத்திய, ஆலோசனைக் கூட்டத்தில், உள்துறை, நிதி, விவசாயம், உணவு மற்றும் நுகர்வோர் விவகாரம், நீர்வளத் துறை அமைச்சர்களும், கேபினட் செயலர் மற்றும் பிரதமரின் முதன்மைச் செயலர் மற்றும் கூடுதல் முதன்மைச் செயலரும், இந்திய வானிலை ஆய்வு மைய அதிகாரிகளும் பங்கேற்றனர்.

அப்போது, மோடி பேசியதாவது:

பருவமழை பற்றாக்குறையாக உள்ளது. இருப்பினும், உணவு தானிய உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்க, விவசாயிகளுக்கு, போதுமான தண்ணீர், மின்சாரம் மற்றும் தரமான விதைகள் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும். பருவமழை காலத்திற்காக, தயாரிக்கப்பட்டுள்ள செயல் திட்டங்களை, மத்திய, மாநில அரசுகள், ஒருங்கிணைந்து செயல்படுத்த வேண்டும். பதுக்கல்காரர்கள், கள்ளச்சந்தை பேர்வழிகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க, மாநில அரசுகள் விரைவு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும். இதைச் செய்வதால், சந்தைகளுக்கு

போதுமான அரிசி வரத்து இருக்கும். வெங்காயம் உட்பட, அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையும் ஏற்படாது. மழைநீர் சேகரிப்பையும், சிறப்பான முறையில் அமல்படுத்த வேண்டும். கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை அதிகரிக்க, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தையும், சிறப்பான முறையில் அமல்படுத்த வேண்டும். இவ்வாறு, பிரதமர் மோடி பேசியதாக, பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி கூட்டிய கூட்டத்தில் பங்கேற்ற பின், மத்திய விவசாய அமைச்சர் ராதா மோகன் சிங் கூறியதாவது: தென்மேற்கு பருவமழை, அடுத்த மாதம், 7ம் தேதிக்குப் பின் தீவிரம் அடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. மழை குறைவாகப் பெய்தாலும், அதனால் ஏற்படும் சூழ்நிலையை எதிர்கொள்ள, மத்திய அரசு தயார் நிலையில் உள்ளது. உணவு பாதுகாப்பு சட்டம் மற்றும் வறட்சி நிலவரம் குறித்தும், பிரதமர் கூட்டிய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தென்மேற்கு பருவமழை

காலத்தில், பயிரிடப்படும், கரீப் பருவ பயிர்கள் மற்றும் பருவமழை நிலவரம் குறித்தும், பிரதமரிடம் எடுத்துரைக்கப்பட்டது. பருவமழை மோசமானால், மாநிலங்களுக்கு நிதிச் சலுகை அளிப்பது பற்றியும், பல்வேறு அமைச்சகங்களுடன் விவாதிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பான

பரிந்துரைகள், விரைவில், மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும். தேசிய விவசாய வளர்ச்சித் திட்ட நிதியில், 10 சதவீதத்தை நிறுத்தி வைக்கும்படி, மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளோம். வறட்சி நிலைமை உருவானால், அப்போது, அந்த நிதி பயன்படுத்தப்படும். தென்மேற்கு பருவமழை காலத்தில், இதுவரை, 19 லட்சம் ஏக்கரில் நெல்லும், 6.4 லட்சம் ஏக்கரில் பருப்பு வகைகளும், 3 லட்சம் ஏக்கரில், எண்ணெய் வித்துக்களும், 30 லட்சம் ஏக்கரில், பல வகை தானியங்களும் பயிரிடப்பட்டுள்ளன. இவ்வாறு, ராதா மோகன் சிங் கூறினார்.

**<u>காரீப் பருவத்துக்கான உரங்கள் தயார்: வேளாண் அதிகாரி தகவல்</u>**

**கிருஷ்ணகிரி:**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பு காரிப் பருவத்துக்கான அனைத்து ரசாயன உரங்களும் தயார் நிலையில் உள்ளதாக, வேளாண்மை இணை இயக்குனர் மணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட செய்திகுறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோடை மழை இயல்புக்கு அதிகமாக பெய்துள்ளதாலும், அண்டை மாநிலங்களாக கர்நாடகா மற்றும் ஆந்திராவில் மழை பெய்துள்ளதாலும், மானாவாரி பயிர்களான ராகி, சோளம், கம்பு, நிலக்கடலை மற்றும் பயிறு வகை பயிர்களும் இறைவை பயிர்களும் அதிக பரப்பில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது.

மேலும், நடப்பு காரிப் பருவத்தில், 19 ஆயிரம் ஹெக்டேரில், நெல், 60 ஆயிரம் ஹெக்டேரில், மானாவாரி சிறு தானியங்கள், 30 ஆயிரம் ஹெக்டேரில் பயிறு வகை பயிர்கள், 24 ஆயிரம் ஹெக்÷டெரில் எண்ணைய்வித்து பயிர்கள், மூன்றாயிரம் ஹெக்டேரில், கரும்பு, ஆயிரத்து, 500 ஹெக்டேரில் பருத்தி, ஆறாயிரம் ஹெக்டேரில் காய்கறி பயிர்கள், 10 ஆயிரம் ஹெக்டேரில், இதர தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த பயிர் சாகுபடிக்கு, தேவையான ரசாயன உரங்கள், ஒன்பதாயிரம் மெட்ரிக் டன் தழைச்சத்து உரங்களும், நான்கு ஆயிரம் மெட்ரிக் டன் மணிச்சத்து

உரங்களும், 8 ஆயிரம் மெட்ரிக் டன் சாம்பல் சத்து உரங்களும் கணக்கிடப்பட்டு அதற்கு ஏற்றவாறு யூரியா, 11 ஆயிரம் மெட்ரிக் டன், டி.ஏ.பி., 8 ஆயிரம் மெட்ரிக் டன், பொட்டாஷ், 5 ஆயிரம் மெட்ரிக் டன், காம்பளக்ஸ், 17:17:17 4 ஆயிரம் மெட்ரிக் டன், 16:16:16 காம்பளஸ், 6 ஆயிரம் மெட்ரிக் டன் மற்றும் இதர கலப்பு உரங்களும், கலவை உரங்களும் கணக்கிடப்பட்டு, சென்னை வேளாண்மை ஆணையரின் உத்தரவுப்படி ஒதுக்கீடு பெற்று, தனியார் உர விற்பனை நிலையங்களிலும், கூட்டுறவு வேளாண்மை தொடக்க கடன் சங்கங்களின், விற்பனை நிலையங்களிலும் தயார் நிலையில் உள்ளது.

தனியார் உரக்கடைகளுக்கு தேவையான அனைத்து உரங்களும் மாவட்டத்தில் உள்ள 25 ஒட்டுமொத்த உர விற்பனையாளர்கள் மூலமாக நேரடியாக தனியார் உர உற்பத்தி நிறுவனங்கள் மூலமாக அனுப்பி வைக்கப்படுகிறது. கூட்டுறவு வேளாண்மை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் உர விற்பனை நிலையங்களுக்கு டான்பெட் நிறுவனம் மூலமாக நேரடியாக அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், மாவட்டம் முழுவதும், 10 வட்டாரங்களில் உர விற்பனையை கண்காணிக்க சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் வட்டார அணுளவில் குழுவின் தலைவராக வேளாண்மை உதவி இயக்குனரும், உறுப்பினராக வேளாண்மை அலுவலர்களும், மாவட்ட அளவில், கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இயக்குனர் மணி தலைவராகவும், வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பபாடு பச்சையப்பன் உறுப்பினர் செயலராகவும் செயல்படுவார்கள்.

உர விற்பனையை கண்காணிக்கவும், மாவட்டம் முழுவதும் தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு உரங்கள் உடனுக்குடன் கிடைக்கவும், அதிக பட்ச சில்லரை விற்பனை விலைக்கு மிகையால் விற்பனை செய்யவும் இந்த குழு கண்காணிப்பணியை மேற்கொள்ளும்.

உர விற்பனை குறித்து புகார் தெரிவிக்க விரும்புவோர்,வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு பச்சையப்பன், 94434-91495, மேலும், வட்டார அளவில் கிருஷ்ணகிரி, 94434-64752, 96986-12646, காவேரிப்பட்டணம், 94864-66956, 94864-48460, பர்கூர், 96267-61735, வேப்பனப்பள்ளி, 94433-15218, 94434-42214, ஊத்தங்கரை, 98428-83423, மத்தூர், 93618-12803, 97875-08300, ஓசூர், 94865-54633, 94436-26340, சூளகிரி, 90478-85112, 94865-98182,

கெலமங்கலம், 99940-18570, தளி, 94422-34468, 95970-20512 ஆகிய, மொபைல்ஃபோன் எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**<u>பண்டிகை, ஸ்கூல் சீசன் நிறைவு கனி மார்க்கெட் விற்பனை மந்தம்</u>**

**ஈரோடு:** பண்டிகை, ஸ்கூல் சீசன் முடிந்ததால், ஈரோடு கனி மார்க்கெட்டில், இந்த வாரம், ஜவுளி விற்பனை பாதியாக குறைந்தது. ஈரோடு பி.எஸ்.பார்க், கனி மார்க்கெட்டில், 306 தினசரி மற்றும் டிரங்கு பெட்டி கடைகள், 700 வாரந்திர கடைகள் உள்பட, 1,006 கடைகள் உள்ளன.

தவிர திருவேங்கடசாமி, ஈஸ்வரன் கோவில் வீதிகளில், நூற்றுக்கும் மேற்பட்ட பிளாட்பார கடைகளும் உள்ளன. வாரம் தோறும் நடக்கும் சந்தையில், சேலம், இளம்பிள்ளை என்று சேலம் மாவட்டம் உள்பட, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள் ஜவுளி ரகங்களை, கொண்டு வந்து விற்பனை செய்வர். கடந்த, இரண்டு வாரகாலம், பள்ளி சீசனாக இருந்ததால், சீருடைகள் மட்டுமே, 30 லட்சம் ரூபாய் மதிப்பிலும், பனியன், ரெடிமேடு, காட்டன் ஆடைகள், உள்ளாடைகள் போன்றவை, 40 லட்சம் மதிப்பிலும் விற்பனையானது.

இதனால், இந்த வாரமும் விற்பனை நன்றாக இருக்கும், என, எதிர்பார்த்து, அதிகளவில், ஜவுளிகளை கொண்டு வந்த வியாபாரிகள் ஏமாற்றமடைந்தனர்.

இதுகுறித்து, ஈரோடு கனி மார்க்கெட் வாரச்சந்தை அனைத்து ஜவுளி வியாபாரிகள் சங்க தலைவர் செல்வராஜ் கூறியதாவது: கடந்த, இரண்டு மாதங்களுக்கு, முன்னர், தேர்தல் நடத்தை விதிமுறைகளின் காரணமாக, வியாபாரம் மிகவும் மந்தமாக காணப்பட்டது. ஏப்ரல் மாதத்துக்கு பின், மீண்டும் வியாபாரம் சூடுபிடித்தது. குறிப்பாக, ஜூன் மாத துவக்கத்தில், பள்ளி சீசன் என்பதால், சீருடைகளின் விற்பனை நன்றாக இருந்தது. இதனால், கடந்த, இரண்டு வாரங்களில் மொத்த ஜவுளி விற்பனை, 70 லட்சம் ரூபாயாக இருந்தது. ஆனால், இந்த வாரச்சந்தையில், 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான ஜவுளி ரகங்களே விற்பனையானது. பண்டிகை, ஸ்கூல் சீசன் முடிந்ததே காரணம். ஆடிமாதம் விற்பனை அதிகரிக்கும், என, எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## வறட்சியின் பிடியில் கடம்பூர் பகுதி வயலோடு வாடுது "குச்சிக்கிழங்கு'

**சத்தியமங்கலம்:** கடம்பூர் மலைப்பகுதியில், பருவமழை பொய்த்தால், கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால், நடவு செய்யப்பட்ட குச்சிக்கிழங்கு செடி வயலிலேயே வாடி நிற்கிறது.

சத்தியமங்கலம் அடுத்துள்ளது கடம்பூர் மலைப்பகுதி. இது கடல் மட்டத்தில் இருந்து, 750 மீட்டர் உயரம் கொண்ட பகுதியாகும். இங்குள்ள மக்கள் தங்களுடைய வயலில், மானாவாரி பயிர்கள் நடவு செய்து, அதன் மூலம் வருமானம் பெற்று வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும், இங்கு பருவமழை சரியாக பெய்து வந்ததால், கடம்பூர் மலைப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு, சிரமம் இல்லாமல் செழிப்பாக இருந்து வந்தனர். கடந்த, நான்கு ஆண்டுகளாக, தங்கள் வயல்களில் குச்சிக்கிழங்கு நடப்பட்டு, சரியாக பெய்த மழையினால், இந்த குச்சிக்கிழங்கு அதிக மகசூல் கொடுத்து வந்தது. இதனால், பாதாளத்தில் இருந்த, கடம்பூர் மலைப்பகுதி மக்களின் வாழ்க்கை ஓரளவு மேம்பட்டது.

ஆனால், கடந்த, இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், இங்குள்ள விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். குடி தண்ணீருக்கே தேடி அலையும் நிலை ஏற்பட்டுள்ளது. எப்படியும் மழை வரும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் தங்கள் நிலங்களில் குச்சிக்கிழங்கு பயிரிட்டனர். இந்த குச்சிக்கிழங்கு, தற்போது வயலோடு வாடி நிற்கிறது. குச்சிக்கிழங்கு செடி காய்ந்து கொஞ்சம், கொஞ்சமாக அழிந்து வருகிறது. இதனால், விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர். பவளக்குட்டை, கல்கடம்பூர், ஏலஞ்சி, பசுவனாபுரம், கரளியம், பெரியஉல்லேபாளையம், சின்ன உல்லேபாளையம் உள்ளிட்ட பகுதிகளில், குடி தண்ணீர் தேடி பல கி.மீ., தூரம் பெண்கள் செல்கின்றனர்.

## அக்மார்க் தரச்சான்று பொருள் பயன்படுத்த அறிவுர

**கரூர்:** கலப்பட உணவு பொருள்களை தடுக்க, அக்மார்க் தரசான்று பெற்ற பொருட்களை பயன்படுத்துமாறு, மாநில அக்மார்க் ஆய்வக, கரூர் வேளாண்மை அலுவலர் டேவிட்ராஜசேகர் தெரிவித்தார்.

நாம் பயன்படுத்தும் உணவுபொருட்கள் தரமானதாகவும், சுத்தமானதாகவும், கலப்படமற்றதாகவும் இருக்கவேண்டும். அப்படி இல்லையெனில், மனித உடலில்

பலநோய்கள் உண்டாகிறது. இவற்றை தவிர்த்து தரமான கலப்படமற்ற, சுத்தமான உணவுபொருட்களை நுகர்வோர்கள் எளிதில் அடையாளம் கண்டுகொள்ள, அக்மார்க் திட்டம் உதவுகிறது. கலப்பட உணவு பொருட்களினால், கண்பார்வை மங்குதல், வயிறுவலி, வயிற்றுப்போக்கு, நெஞ்சுவலி, மாரடைப்பு, தோல்நோய், உடலில்கட்டி, ஆண் மலட்டுத்தன்மை, புற்றுநோய், மூளையின் பணி முடக்கம், போன்ற நோய்கள் ஏற்படுகிறது. உணவு பொருள்களில் இருந்து மாதிரி எடுத்து, பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக, தாவர சமையல் எண்ணைகளுக்கு, அமிலத்தன்மை சோதனை, ஒளி விலகல் சோதனை, அடர்த்தி எண் சோதனை, அயோடின் மதிப்புசோதனை, பிற எண்ணை கலப்பட சோதனை போன்ற, பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு உணவு பொருட்களுக்கும், பல பிரத்யேக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவில், கலப்படம் இல்லாத, சுத்தமான தரமான உணவு பொருள்களுக்கு, அரசின் அக்மார்க் முத்திரை சீட்டு ஒட்டப்படுகிறது. அக்மார்க் முத்திரை சீட்டுஒட்டி வரும் உணவு பொருள்களை வாங்கி பயன்படுத்துவதால், நுகர்வோர்கள் பணத்தின் மதிப்பிற்கு ஈடான சத்துகுறையாத உணவு பொருள்களை பெறமுடியும். என்று அவர் கூறினார்.

**<u>லாபம்! கருவேல மரங்களை அழித்து பருத்தி சாகுபடி அமோகம்; கமுதி, முதுகுளத்தூர் விவசாயிகள் தீவிரம்</u>**

கமுதி : கமுதி பகுதியில் கருவேல மரங்களை அழித்து பருத்தி சாகுபடி செய்வதால், விவசாயிகளுக்கு நல்ல லாபமும், நிலத்தடி நீர் ஆதாரம் பெருகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் கருவேல மரங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ள மாவட்டங்களில் ராமநாதபுரத்திற்கே முன்னுரிமை உண்டு.

ஏனெனில் பெரும்பாலான கிராமங்களில் கருவேலமரங்களே ஆக்கிரமித்துள்ளது. கமுதியில் 13 ஆயிரம் எக்டேர் உட்பட, மாவட்டத்தில் 63 ஆயிரத்து 743 எக்டேர் நிலத்தை, கருவேல மரங்கள் ஆக்கிரமித்துள்ளன. இதனால் இப்பகுதியில் பல நூறு அடி ஆழம் வரை நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குமுறி வருகின்றனர். ஐந்து ஆண்டுகளுக்கு முன், இப்பகுதியில் 50 அடி ஆழத்தில்

கிடைத்த நிலத்தடி நீரானது, தற்போது 300 அடி ஆழத்திற்கு சென்றுவிட்டது. இதேநிலை நீடித்தால் நிலத்தடி நீரை கானல்நீராகும் அபாயம் ஏற்பட்டு, மக்கள் பலவித இன்னங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

இதுகுறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கருவேல மரங்களை அழித்து, பருத்தி பயிரிட வேளாண் துறை மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதை புரிந்து கொண்ட சில விவசாயிகள் கமுதி பகுதியில், கருவேல மரங்களை அழித்து வருகின்றனர். முதற்கட்டமாக 50 ஏக்கருக்கும் மேற்பட்டு பருத்தி சாகுபடி செய்துள்ளனர். ஒரு ஏக்கருக்கு ரூ.8000 வரை செலவாகிறது. வருமானம் 12 முதல் 15 ஆயிரம் வரை கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.பருத்திக்கு குறைந்த அளவு தண்ணீர் இருந்தால் மட்டுமே போதும். மேலும் கருவேலமரங்கள் முற்றிலும் அழிக்கப்படும் பட்சத்தில் எதிர்காலத்தில் நிலத்தடி நீர் பாதிப்பு ஏற்படாது. வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, ""கருவேல மரங்களை அழிக்க அரசு நிதி கொடுக்க முன்வரும் பட்சத்தில் விரைவில் அழிக்கப்படுவதோடு, பயிர் சாகுபடி பரப்பளவும் அதிகரிக்க வாய்ப்பு உருவாகும்," என்றார். முதுகுளத்தூரில் தாராளம் : வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது: ஒரு எக்டேருக்கு 800 முதல் 1000 கிலோ வரை மகசூல் கிடைக்கும். தரத்தின் அடிப்படையில் கிலோ பஞ்சு 35 முதல் 45 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஈரப்பதம் நன்றாக உள்ள இடங்களில் ஆயிரம் கிலோவிற்கு மேல் மகசூல் கிடைக்கும். முதுகுளத்தூர் பகுதியில் மட்டும் 1200 எக்டேரிலும், அடுத்தபடியாக கமுதி மற்றும் நயினார்கோவில் ஒன்றிய பகுதிகளில் பருத்தி சாகுபடி நடக்கிறது. நடப்பாண்டு பெரும்பாலான இடங்களில் மகசூல் முடிந்துவிட்டது. காலதாமதமாக பயிரிட்ட விவசாயிகள் மட்டுமே தற்போது மகசூல் ஈட்டி வருகின்றனர், என்றார்.

**<u>சிறையில் கைதிகள் நிலக்கடலை சாகுபடி; ஒரு ஹெக்டேருக்கு ரூ 2 லட்சம் லாபம்</u>**

**திருநெல்வேலி :** நெல்லை மத்திய சிறையில் கைதிகள் மேற்கொண்ட சாகுபடியில் பாபா அணு ஆராய்ச்சி தயாரிப்பு நிலக்கடலை லாபத்தை தந்துள்ளது. திருநெல்வேலி, பாளையங்கோட்டை மத்திய சிறையில் உள்ள ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளில், நன்னடத்தை கைதிகளாக உள்ள சுமார் 100 பேரை பயன்படுத்தி பல்வேறு விவசாய, உற்பத்தி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கைதிகள் தயாரிப்பில் மேற்கொள்ளப்படும் பிரியாணி உள்ளிட்ட உணவு பொருட்களும் அங்குள்ள அங்காடியில் விற்பனை செய்யப்படுகிறது. பாளையங்கோட்டைசிறை வளாகத்தில் சுமார் ஐந்து ஏக்கரில் , மும்பை பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தின் கண்டுபிடிப்பான புதிய ரக நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது. இந்த ரக நிலக்கடலை அழுகல் மற்றும் வளைய தேமல் நோய் எதிர்ப்பு கொண்டதும், வறட்சியை தாங்க கூடியதாகும். அதன் அறுவடைப்பணி நேற்று நடந்தது. நிகழ்ச்சியில் மும்பை பாபா அணு ஆராய்ச்சி மைய மூத்த விஞ்ஞானி டேனியல் செல்லப்பா, வேளாண்மை உதவி இயக்குநர் மாரியப்பன், சிறை கண்காணிப்பாளர் கனகராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். புதிய ரக கண்டுபிடிப்பான நிலக்கடலை ஹெக்டேருக்கு 2 முதல் 2.5 டன் உற்பத்தியாகும் திறன் கொண்டதாகும். ஒரு ஹெக்டேர் பயிரிட 60 ஆயிரம் ரூபாய் செலவாகியுள்ளது. அதன் மூலம் இரண்டு லட்சம் லாபம் கிடைத்துள்ளது. இதில் கிடைக்கும் லாபத்தை கைதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>குடமிளகாய் விளைச்சல் ஜோர்: கி.கிரி விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அடுத்த சேக்னாம்பட்டியில் பசுமை குடிலில் வளர்க்கப்பட்டுள்ள குடமிளகாய் அதிக விளைச்சல் தந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வடமாநிலங்களில் உள்ள ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் தாபாக்களில் காரம் குறைவாக சற்று இனிப்பு கலந்த சுவை உள்ள குடமிளகாய் பயன்பாடு அதிகம்

உள்ளது. பொதுவாக, குடமிளகாய் குளிர் சீதோஷ்ண நிலையில் நன்கு வளரும். எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை சுற்று வட்டார மலை கிராமங்களில், அதிக பரப்பில் குடமிளகாய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அடுத்த சேக்னாம்பட்டியில் ஐந்து விவசாயிகள் ஒன்று சேர்ந்து பசுமை குடில் அமைத்து, குடமிளகாய் சாகுபடி செய்துள்ளனர். விவசாயிகள் எதிர்பார்த்தது போல், குடமிளகாய் விளைச்சல் அமோக உள்ளது. அரை ஏக்கரில் இரண்டு யூனிட் என்ற அளவில் ஐந்து பேர் சேர்ந்து பசுமை குடில் அமைத்து, எட்டு யூனிட்டில் குடமிளகாய் சாகுபடி செய்துள்ளனர்.

ஆறு மாதகாலம் அறுவடை உள்ள இந்த செடியில் வாரத்துக்கு இரண்டு முறை அறுவடை செய்யப்படும். இவ்வாறு, அறுவடை செய்யப்பட்ட குடமிளகாய் ஓசூர், டெல்லி, மும்பை, சென்னை மற்றும் ஹைதராபாத் போன்ற பெரு நகரங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அரை ஏக்கரில் ஆறு மாத காலத்தில் 2 லட்ச ரூபாயில் இருந்து 5 லட்ச ரூபாய் வரை வருமானம் கிடைப்பதால் பர்கூர் சுற்றுவட்டார பகுதியில் மேலும் சில விவசாயிகள் பசுமை குடில் மூலம், குடமிளகாய் சாகுபடி செய்ய முன்வந்துள்ளனர்.

சேக்னாம்பட்டியை சேர்ந்த விவசாயி முனுசாமி கூறியதாவது:

பசுமை குடில் அமைக்க வேளாண் துறை சார்பில், 50 சதவீத மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், குடமிளகாய் சாகுபடிக்கு, சொட்டு நீர் பாசனம், 100 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதனை கொண்டு, நாங்கள் ஐந்து பேர் ஒன்று சேர்ந்து குடமிளகாய் சாகுபடி செய்தோம். கடந்த ஐந்து மாத காலத்தில், இதுவரை, 11 டன் குடமிளகாய் அறுவடை செய்து ஏற்றுமதி செய்துள்ளோம். ஒரு குடமிளகாய், 125 கிராம் எடை கொண்ட முதல் தர குடமிளகாய் ஒரு கிலோ, 41 ரூபாய்க்கும், ஒரு குடமிளகாய், 80 கிராம் எடை கொண்ட இரண்டாம் தரம் ஒரு கிலோ, 25 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. பசுமை குடிலில் செடிகள் வளர்வதால், நோய் தாக்குதல் குறைந்தே காணப்படுகிறது. ஓசூர் போன்ற குளிர் சீதோஷ்ண நிலையை நாங்களும் பசுமை குடிலில் தருவதால் குடமிளகாய் செடிகள் நன்றாக வளர்ந்து அதிக விளைச்சல் தந்துள்ளது. எங்களை பார்த்து, பக்கத்து நிலத்தில் உள்ள பல விவசாயிகளும் குடமிளகாய் சாகுபடி செய்ய துவங்கி உள்ளனர், என்றனர்.

**<u>பெரும்பாறை பகுதிகளில் மிளகு சீசன் தொடங்கியது</u>**



**திண்டுக¢கல்**, மாவட்டம் பெரும்பாறை பகுதியில் உள்ள மஞ்சள்பிரப்பு, கொங்கப்பட்டி, பில்லாவெளி, குப்பமாள்பட்டி, மங்களம்கொம்பு, கே.சி.பட்டி, ஆடலூர், பன்றிமலை, சோலைக¢காடு, பெரியூர், பாச்சலூர் போன்ற மலைப்பகுதிகளில் தற்போது மிளகு சீசன் தொடங்கி உள்ளது. இந்த ஆண்டு மழை பெய்யாத காரணத்தால், விளைச்சலும் தரமும் குறைந்துள்ளது. தற்போது 1 கிலோ கருப்பு மிளகு ரூ.700-க¢கும், 1 கிலோ பச்சை மிளகு காம்புடன் ரூ.170-க¢கும் விற்பனை செய்யப்படுகிறது.

பெரும்பாறை பகுதிகளில் விளையும் பச்சை மிளகு மஞ்சள்பிரப்பில் உள்ள கமிஷன் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. இவை தரம் பிரித்து பதப்படுத்துவதற்கு பட்டிவீரன்பட்டிக¢கு கொண்டு செல்லப்படுகிறது. பின்னர் அங்கு இருந்து வியாபாரிகள் வாங்கி திண்டுக¢கல், மதுரை நகரங்களுக¢கும் மற்றும் வெளிமாநிலங்களுக¢கும் விற்பனைக¢காக கொண்டு செல்கின்றனர். தற்போது

மிளகு விளைச்சல் தரம் குறைந்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

**<u>பெருங்குளம் மாதிரி விவசாயப் பண்ணையில் மண்புழு,இயற்கை உரம் தயாரிப்பு கலெக்டர் பார்வையிட்டார்</u>**



**பனைக்குளம்,**

பெருங்குளம் மாதிரி விவ சாயப்பண்ணையில் மண்புழு, இயற்கை உரம் தயாரிப்பு குறித்து கலெக்டர் பார்வையிட் டார்.

**<u>பயிற்சி</u>**

ராமநாதபுரம் மாவட்டத்தில் 25 ஆயிரம் எக்டேர் பரப் பளவில் தென்னை சாகுபடி நடந்துவருகிறது. குறிப்பாக மண்டபம் வட்டாரத்தில் 7 ஆயிரம் எக்டேர் பரப்பில் தென்னை விவசாயம் நடந்து வருகிறது. வேளாண் தொழில் நுட்ப துறை சார்பில் 25 விவசா யிகளுக்கு வண்டுகளை பொறிவைத்து பிடிக்க விவ சாயி நாபிக் தலைமையில் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி பெருங்குளம் ம.இ.விவசாய பண்ணையில் நடந்தது.

இதில் சிகப்பு, காண்டா மிருகம் உள்ளிட்ட வண்டு களை கவர்ச்சி பொறி வைத்து பிடிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பண் ணையில் 50 ஏக்கரில்தென்னை, மா மரம் மற்றும் சப்போட்டா, கொய்யா, தர்ப்பூசணி, ரம்

டான்செடி வளர்க்கப்பட்டு வருகிறது. இதுதவிர வாத்து, லவ்பேட்ஸ் உள் ளிட்ட பறவை களும் வளர்க்கப்பட்ட வருகின் றன.

ஆய்வு

இந்தநிலையில் மண்டபம் வட்டாரம் பெருங்குளம் கிரா மத்தில் உள்ள ஒருங்கிணைந்த மாதிரி இயற்கை விவசாயப் பண்ணையில் மாவட்ட கலெக்டர் நந்தகுமார் பார்வை யிட்டு ஆய்வு செய்தார். அவரை பண்ணையின்உரிமை யாளர் அப்துல்நாபிக் வரவேற் றார்.

பின்னர் பண்ணையில் உற் பத்தி செய்யப்படும் மண் புழுஉரம் எவ்வாறு தயாரிக் கப்படுகிறது, இயற்கை உரத் தின் முக்கியத்துவம், பெர் மிவாஷ் மண்புழுவின் பயன் பாடு,இயற்கை பூச்சிவிரட்டி குறித்து கலெக்டர் கேட்டறிந் தார். பின்னர் தென்னை மரங் களுக்கு மாவட்ட வேளாண் துறையால் மானியத்தில் அமைத்து கொடுக்கப்பட்ட சொட்டுநீர் பயன்பாட்டையும் ஆய்வு செய்தார்.

ஏற்றுமதி

அப்போது விவசாயிகள் மண்புழு உரம் தயாரிக்கமுன் வந்தால் அதனை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து பயன்பெற ஆலோசனைவழங் கினார். இதில் கலெக்டரின் நேர்முக உதவியாளர், வேளாண்மை இணைக்குனர் கிருஷ்ண மூர்த்தி, உதவி இயக் குனர் சேக்அப்துல்லா மற்றும் பெருங் குளம் விவசாயி இஸ் மாயில், உச்சிப்புளி விவசாயத் துறை அதிகாரிகள் வேளாண் துணை இயக்குனர், அட்மா துணை இயக்குனர், அதிகா ரிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினகரன்

**வானூரில் உழவர் பாதுகாப்பு திட்ட நிதியுதவி ஆய்வு கூட்டம்**

**வானூர்:** வானூர் தாலுகா அலுவலகத்தில் உழவர் பாதுகாப்பு திட்டத் தின் கீழ் பயனாளிகளுக்கு விரைவாக நிதி உதவி வழங்குவது தொடர்பான ஆய்வுகூட்டம் நடந்தது.

தாசில்தார் ருக்மணி ஸ்ரீவித்யா தலைமை தாங்கி னார். சமூக பாதுகாப்பு தனி வட்டாட்சியர் சையத்மெகமூத், மண்டல துணை வட்டாட்சியர் பாலசுப்பரமணியன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ஜோதிவேல், சிறப்பு அமலாக்க திட்ட துணை வட்டாட்சியர் சுந்தரராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

109 பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகையாக ரூ. 9 லட்சத்து 12 ஆயிரத்து 500, 98 பயனாளிகளுக்கு 12 லட்சத்து 25 ஆயிரமும், 9 நபர்களுக்கு விபத்து நிவாரணமாக ரூ.9 லட்சத்து 22 ஆயிரத்து 500 உடனடியாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்வது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. வானூர் தாலு காவுக்கு உட்பட்ட பகுதிகளில் விடுபட்ட இடங் களில் ஆதார் அட்டை எடுப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது. வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள் கலந்துகொண்டனர்.

**தண்ணீர் பற்றாக்குறையால் நடவடிக்கை கம்பம் பள்ளத்தாக்கு பகுதி வயல்களில் ஆழ்துளை கிணறு அமைத்துநீர் பாய்ச்சும் விவசாயிகள்**

**கம்பம்,:**கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக வயல்வெளிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். கம்பம் பள்ளத்தாக்கு பகுதியான லோயர்கேம்ப் முதல் பழனிசெட்டிபட்டி வரை 14,707 ஏக்கரில் முல்லை பெரியாறு அணை தண்ணீரை நம்பி இருபோக நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை சரியான நேரத்தில் பருவமழை பெய்ததால், நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு பாசனத்திற்கு தேவையான தண்ணீர் கிடைத்து வந்தது. இதனால்

விவசாயத்திற்கு எந்த பிரச்னையும் இல்லாமல் இருந்தது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், முல்லை பெரியாறில் பாசனத்திற்காக திறந்து விடப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்டு வருகிறது. இத னால் விவசாயிகள் எதிர்பார்த்த அளவு நெல் அறு வடை செய்ய முடியாமல் கம்பம் சுற்றியுள்ள பல பகுதிகளில் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெற்பயிர்கள் கருகி விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்து வந்தனர்.

இந்நிலையில் அவ்வப் போது ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க ஏழரசுகளம், ஊமையன் வாய்க்கால், வீரப்பநாயக்கன்குளம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பெரும்பாலான வயல்வெளிகளில் விவசாயிகள் ஆழ்துளை கிணறுகள் அமைத்து நெல் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் சமயங்களில் உரிய முறையில் பயிர்களை காப்பாற்றி அறுவடை செய்ய முடியும் என இப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.கம்பம் ஏழரசு களம் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக வயல்களில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

**<u>தென்னையும் தப்பவில்லை பருவமழை தவறியதால் நெல் விவசாயம் கடும் பாதிப்பு</u>**

**வத்திராயிருப்பு, :**பருவமழை தவறியதால் வத்திராயிருப்பு பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாக நெல் விவசாயப் பரப்பு குறைந்து வருகிறது. தென்னை விவசாயமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

வத்திராயிருப்பு பகுதி யில் கான்சாபுரம், கொடிக்குளம், மகாராஜபுரம், வத்திராயிருப்பு, புதுப்பட்டி, சுந்தரபாண்டியம், கோட் டையூர் உள்பட 22க்கும் மேற்பட்ட கிராமங்களில் நெல் விவசாயமும், தென்னை விவசாயமும் நடக்கிறது. வத்திராயிருப்பு மற்றும் பிளவக்கல் அணைப் பகுதிகளில் கடந்த 10 ஆண்டுகளாக மழையின் அளவு குறைந்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளாக மழையளவு கடுமையாக குறைந்ததால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் 2011-12ம் ஆண்டு பருவ காலத்தில் நெல் விவசாயம் 10,552 ஏக்கர் பரப்பில் செய்யப்பட்டது. கோடை காலத்தில் 4,412 ஏக்கர் பரப்பில் நெல் விவசாயம் நடந்தது. 2012-13ம் ஆண்டு காலத்தில் 8,830 ஏக்கரிலும், கோடை காலத்தில் 3,330 ஏக்கரிலும் நெல் விவசாயம் செய்யப்பட்டது. 2013-14ம் ஆண்டு

பருவமழை காலத்தில் 5,300 ஏக்கரில் நெல் விவசாயம் செய்யப்பட்டது. கோடை காலத்தில் 1,125 ஏக்கரில் விவசாயம் நடந்தது. இதன்மூலம் இப்பகுதியில் நெல் விவசாயம் ஆண்டுதோறும் குறைந்து வருவது தெரிகிறது.

பருவமழை போதிய அளவில் இல்லாததால் கடந்த மூன்று ஆண்டுகளாக பிளவக்கல் பெரியாறு, கோவிலாறு அணைகள் நிரம்பவில்லை. மேலும் இப்பகுதியில் உள்ள 40 கண்மாய்களும் வறண்டு கிடக்கின்றது. விவசாய கிணறுகள், ஆழ்துளை கிணறுகளிலும் போதிய அளவில் தண்ணீர் கிடைப்பதில்லை. நிலத்தடி நீர்மட்டமும் நாளுக்குநாள் குறைந்து வருவதால் விவசாயம் கேள்விக்குறியாகியுள்ளது.

இதேபோல் தென்னை விவசாயமும் பரிதாப நிலையை எட்டியுள்ளது. நெல்லுக்கு அடுத்தபடியாக வத்திராயிருப்பு பகுதியில் தென்னை விவசாயம் 10,020 ஏக்கர் பரப்பில் நடக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகள் நிலவிய வறட்சியின் காரணமாக சுமார் மூன்றாயிரம் ஏக்கரில் தென்னை மரங்கள் கருகிவிட்டன. விவசாயிகள் பயிர் கடனை செலுத்த முடியாமல் பரிதவிக்கின்றனர். இதனால் இப்பகுதி விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் நூற்றுக்கணக்கானோர் பிழைப்பு தேடி சிவகாசியில் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு ஆலைகளுக்கு சென்று வருகின்றனர்.

இதுகுறித்து வத்திராயிருப்பை சேர்ந்த கட்சி சார்பற்ற விவசாய சங்க தலை வர் சேது வெ.செல்லச்சாமி கூறுகை யில், `வத்திராயிருப்பு பகுதியில் கடந்த நான் கு வருடங்களாக சரிவர மழை பெய்யவில்லை. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருங்கிணைந்த ராமநாதபுரத்தில் நெற்களஞ்சியமாக விளங்கிய வத்திராயிருப்பில், நெல் சாகுபடி குறைந்து வருகிறது. தென்னை மரங்களும் கருகி வருகின்றன. இதுகுறித்து மாவட்ட கலெக்டர் மற்றும் வேளாண்துறை அதிகாரிகளுக்கு மனு கொடுத்தும் நடவடிக்கை இல்லை. அரசு இப்பகுதியில் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

**பெரம்பலூரில் வரும் நிதியாண்டில் ரூ2,488 கோடி கடன் வழங்க இலக்கு விவசாயத்துக்கு மட்டும் ரூ1,900 கோடி**

**பெரம்பலூர், :** பெரம்பலூர் மாவட்டத்தில் வரும் நிதியாண்டில் ரூ.2, 488 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் விவசாய கடன்களுக்கு

மட்டும் ரூ.1,900 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் வங்கியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் தரேஸ்அஹமது தலைமை வகித்துப் பேசியதாவது :

பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு வங்கிகள் மூலமாக மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் வரும் நிதியாண்டில் ரூ2,488 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயக்கப்பட்டு நிதி ஒதுக் கிடு செய்யப்பட்டுள்ளது.

இதில் கல்விதொடர்புடைய கடனுதவிகளுக்கு ரூ70கோடியும், விவசாயம் தொடர் புடைய கடனுதவிகளுக்கு ரூ1900 கோடியும், வீடுகட்ட கடனுதவியாக ரூ75கோடியும், தொழில் கடன்களுக்கு ரூ162 கோடி யும், மற்ற முன்னுரிமை கடன்களுக்காக ரூ281 கோடியும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நடப்பு கல்வியாண்டில் பயிலும் மாணவ, மாணவியர்களின் நலன்களுக்காக வழங்கப்படவுள்ள கல்விகடன் மற்றும் விவசாயிக ளுக்கு வழங்கப்படவுள்ள விவசாயக்கடன் வழங்கும் முகாம்களில் பயனாளிகளுக்கு வங்கிகள்முழு ஒத்துழைப்பு அளித்திட வேண்டும் எனத் தெரிவித்தார்.

முன்னதாக ஐஓபி வங்கியின் கிராமிய சுயவேலைவாய்ப்புப் பயிற்சி கையேட் டினை கலெக்டர் தரேஷ்அஹமது வெளியிட, அதனை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மண்டல மேலாளர் வரதராஜன் பெற்றுக்கொண்டார். இப்பயிற்சி கையேட்டில் கிராம பகுதிகளில் வேலைவாய்ப்பை பெருக்கும் விதத்தில் படித்து முடித்து வேலையில்லா இளைஞர்களிடம் வேலைவாய்ப் பினை உருவாக்கும் வகை யில் தொழிற்பயிற்சி அளித்து வாழ்வாதாரத்தை பெருக்கும் நோக்கத்தில் கடனுதவிகளை வழங்கி அவர்களது வாழ்க் கையின் முன்னேற்றத்திற்கு உதவிடும் வகையில் தொழிற்பயிற்சி முறைகள் மற்றும் வங்கிகளில் கடனுதவிகளை பெற வழிவகைகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

கூட்டத்தில் பெரம்பலூர் சப்கலெக்டர் மதுசூதன்ரெட்டி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தஞ்சை மண்டல முதன்மை மேலாளர் வரதராஜன், இந்தியன் ஓவர்சீஸ் வங் கியின் முதன்மை மேலாளர் ராஜா, இந்திய ரிசர்வ் வங்கியின் உதவிப் பொதுமேலாளர் பாலு, மாவட்ட முன்னோடி வங்கியின் மேலாளர் சந்திரசேகரன் உள்ளிட்ட வங்கி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கோழிவளர்ப்பு பயனாளிகளுக்கு 6 நாள் பயிற்சி-28ல் சான்றிதழ்மைய இயக்குனர் தகவல்

**பெரம்பலூர், :** பெரம்பலூரில் கோழிவளர்ப்பு பயனாளிகளுக்கான சிறப்பு பயிற்சி ஐஓபி சார்பில் 6நாள் அளிக்கப்படுகிறது.

பெரம்பலூரில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி யின் கிராமிய சுயவேலை வாய்ப்பு பயிற்சி மையத்தில் 2014 ஜூன்மாதம் 23ம்தேதி முதல் கோழிவளர்ப்பு பயனா ளிகளுக்கான 6நாள் பயிற்சி முகாம் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், பெரம்பலூர் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சிமையம் ஆகியவற்றின் சார்பில் இந்த பயிற்சி நடத்தப்படுகிறது. பயிற்சி குறித்து மைய இயக்குநர் பார்த்தசாரதி தெரிவித்ததாவது:

தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் அதிகமான கோழிவளர்ப்பு பண்ணை கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது பெரம்பலூர் மாவட்டத்திலும் கால்நடைத்துறை சார்பில் வயல் பகுதிகளில் பண்ணைகள் அமைத்து கோழிவளர்ப்பு நடைபெற்று வருகிறது. முட்டைக்காகவும், இறைச்சிக்காகவும் கோழிகள் வளர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கோழிஇறைச்சியை அதிகப்படியானோர் விரும்புவதால் கோழிவளர்ப்பு அதிகரித்து வருகிறது. கோழிவளர்க்கும் பயனாளிகளுக்கு கோழிக்கு அளிக்கப்படும் தீவனங்கள் என்னென்ன, அவை எங்கு கிடைக்கிறது. கோழியைத் தாக்குகிற நோய்கள், பூச்சி கள் என்னென்ன, அவற்றிலிருந்து கோழி களைப் பாதுகாப்பது எப் படி, வளர்ந்து விற்பனைக்கு தயாராகவுள்ள கோழிகளை ஏற்றுமதி செய்து விற்பது குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டு வருகிறது. மேலும் பயனாளிகள் தங்களுக்கான சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள கோழிப் பண்ணை கள் அமைந்துள்ள பகுதிகளுக்கே நேரில் அழைத்துச் செல்லப்பட்டு செயல் முறை விளக்கங்களைப் பெறவுள்ளனர் என்றார்.

பயிற்சியில் சேர்ந்துள்ள அனைவருக்கும் வருகிற 28ம்தேதி பயிற்சி பெற்றதற்கான தகுதிச் சான்றிதழ் கள் வழங்கப்பட உள்ளது.